**OS NO.124/2017** **Date: 18.08.2025**

ரமேஷ் **(DW2)**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது சொந்த ஊர் உத்திரமேரூர் வட்டம், கம்மாளபூண்டி கிராமம். எனக்கு வாதியும் 1ம் பிரதிவாதியும் நன்கு தெரியும் என்றால் தெரியும். வழக்கு சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு சொந்தமான சொத்து. மேற்படி சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்றால் எனது பெற்றோர்கள் மூலம் கிடைத்தது. தாவா சொத்தை குறித்து நான் 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி பொது அதிகார பத்திரத்தை எப்போது யார் முன்னிலையில் எழுதிக்கொடுத்தேன் என்றால் உத்திரமேரூர் சார் பதிவாளர் அலுகலகத்தில் சாட்சிகள் உதயன், பாபு ஆகியோர் முன்னிலையில் எழுதிக்கொடுத்தேன். மேற்படி பொது அதிகார பத்திரம் எந்த தேதியில் எழுதிக்கொடுத்தேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் புல எண் மற்றும் அதன் விஸ்தீரணம் என்ன என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. மேற்படி பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கும் போது தாவா சொத்தின் தாய் பத்திரத்தை 1ம் பிரதிவாதியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் பொது அதிகார பத்திரத்தை எழுதிக்கொடுக்கும் போதே தாவா சொத்தின் தாய் பத்திரத்தை 1ம் பிரதிவாதியிடம் கொடுத்தேன் என்றும் தற்போது வழக்கிற்காக கொடுக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பு வேறு யாருக்கேனும் தாவா சொத்தை குறித்து பொது அதிகார பத்திரம் எழுதி அதை இரத்து செய்துள்ளேனா என்றால் ஆமாம், உதயன் என்பவருக்கு எழுதிக்கொடுத்து பிறகு இரத்து செய்துவிட்டேன். உதயன் என்பவருக்கு

எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தை எந்த தேதியில் இரத்து செய்தேன் என்றால் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அன்று இரத்து செய்தேன். மேற்படி உதயன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரம் தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆவணம் என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரம் தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 இரத்து செய்த அதே நாளில் தான் பி.வா.சா.ஆ-4 ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஏற்படுத்திய தேதியில் 1ம் பிரதிவாதி வாதிக்கு வா.சா.ஆ.6 ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6ல் உள்ள இன்னார் என்று நிரூபித்துள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. மேற்படி கையெழுத்து என்னுடையது என்றும் வழக்கிற்காக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 கிரய ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கும் போது நான் உடன் இருந்தேன் என்றும் அந்த விவரம் எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல, அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 கிரய ஒப்பந்த பத்திரம் 1ம் பக்கத்தில் செல் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பி.சா.ஆ.2 பொது அதிகார பத்திரத்தில் உள்ள சாட்சிகளை நான் இந்த வழக்கில் விசாரணை செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வ.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ-3 ஆவணங்களில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் பி.வா.சா.ஆ2ல் மட்டும் என்னுடைய கையெழுத்து இருக்கும், பி.வா.சா.ஆ.3ல் என்னுடைய கையொப்பம் இருக்காது. 1ம் பிரதிவாதி வாதியிடம் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திய பிறகு 1ம்

பிரதிவாதியிடமிருந்து நான் ரூ.20,50,000/- பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை. பி.வா.சா.ஆ-5 மற்றும் பி.வா.சா.ஆ-6ல் உள்ள கையொப்பம் சாட்சியிடம் கொடுத்து கேட்ட போது அதில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று சாட்சி கூறுகிறார். மேற்படி பி.வா.சா.ஆ-5 மற்றும் பி.வா.சா.ஆ.6ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றும் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று நீதிமன்றத்தில் ஏதாவது மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றும் உண்மையில் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்று சொன்னால் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மனோகரனை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த தேதியிலிருந்து தெரியும். 1ம் பிரதிவாதியிடம் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பும் பின்பும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வக்காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். எனக்கும் 1ம் பிரதிவாதி மனோகரனுக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றும் தற்போது வழக்கிற்காக இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பெயரில் குடியாத்தம் நகர காவல் நிலையத்தில் பி.வா.சா.ஆ.7 குற்ற எண்.32/2018 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் ஆமாம், அது 1ம் பிரதிவாதியால் கொடுக்கப்பட்ட வழக்கு.

மேற்படி குற்ற வழக்கு எதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் பணம் வாங்கி மோசடி செய்துவிட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதியிடமிருந்து ரூ.21 லட்சத்தை பெற்றுக்கொண்டு ஏமாற்றியதால் என்னை 13 நாட்கள் சிறையில் அடைத்தார்கள் என்றால் நான் பணம் வாங்கவில்லை, 1ம் பிரதிவாதி என் மீது பொய் வழக்கு தாக்கல் செய்தார். மேற்படி விவரங்களை தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2017ல் தாக்கல் செய்யப்பட்டது. வாதியும் 1ம் பிரதிவாதியும் தந்தை மகன் உறவுமுறை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும் எவரஸ்ட் பைனான்ஸ் நிறுவனத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு 1ம் பிரதிவாதிக்கும் மேற்படி பைனான்ஸ் நிறுவனத்திற்கும் தொடர்பு உண்டு என்று என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி வழக்கறிஞரின் என்னை குறுக்கு விசாரணை செய்த போது 1ம் பிரதிவாதியின் முன்னிலையில் மேற்படி பைனான்ஸ் நிறுவனத்திடம் நிரப்பப்படாத காசோலை மற்றும் நிரப்பப்படாத கடனுறுதி சீட்டும் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. வாதி முன்னிலையில் கொடுத்தேன். நான் 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகு 1ம் பிரதிவாதி வாதிக்கு ஒரு கிரய ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கும் போது நான் உடன் இருந்தேன் என்றும் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றும் நானும் 1ம்

பிரதிவாதயும் சேர்ந்து வாதிக்கு கிரய பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)